மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ஆறுமுகம் | நாள் | 12.07.2023 |
| தகப்பனார் பெயர் | சித்தன் | | |

**2, 3, 5 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**

1) இவ்வழக்கில் நான் 3–வது வாதி என்றால், சரிதான். இவ்வழக்கில் 1 ம் வாதி, 2 ம் வாதி மற்றும் 4, 5 ம் வாதிகள் எனக்கு என்ன உறவு என்றால், பழனி, காவேரி, குழந்தைபையன் ஆகியோர்கள் என் உடன்பிறந்த சகோதரர்கள். கந்தசாமி என்பவர் என் சித்தப்பா மகன் ஆவார்.

2) இவ்வழக்கின் முதல் மூன்று பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால், அவர்கள் என் சித்தப்பா மகன்கள் ஆவார்கள். என் சித்தப்பா பெயர் அம்மாசி. பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், தடப்பிரச்சனை சம்பந்தமாக தடத்தில் எங்களுக்கு உரிமை உள்ளது எனக்கேட்டு வழக்கு போட்டுள்ளோம்.

3) நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சொத்து என் முப்பாட்டனுக்கு சொந்தமான பூர்வீக சொத்து என நான் என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில், என் முப்பாட்டனாரது பெயர் என்னவென்றால், அவரது பெயர் மந்தி (எ) காவேரி ஆகும்.

4) என் முப்பாட்டனார் மந்தி (எ) காவேரிக்கு எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணங்களில் சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால், மேற்படி விவரம் எனக்கு சரியாக தெரியாது. என் முப்பாட்டனார் மந்தி (எ) காவேரிக்கு மொத்தம் 5 வாரிசுகள். அவர்களில் 3 பேர் ஆண் வாரிசுகள். 2 பேர் பெண் வாரிசுகள்.

5) மேற்படி என் முப்பாட்டன் மந்தி (எ) காவேரியின் ஆண் வாரிசுகளது பெயர் என்னவென்றால், சித்தன், சின்னப்பன் மற்றும் அம்மாசி ஆவார்கள். மேற்படி சித்தனின் வழித்தோன்றல்கள் தான் இந்த வழக்கின் 1 முதல் 4 வரையிலான வாதிகள் என்றால், சரிதான்.

6) என் முப்பாட்டனார் மந்தி (எ) காவேரி எப்போது இறந்தார் என்றால், அவர் சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். இந்த தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால், ஓலைப்பட்டி கிராமத்தில் உள்ளது. என் முப்பாட்டனார் மந்தி (எ) காவேரிக்கு ஆரம்பத்தில் ஓலைப்பட்டி கிராம சர்வே எண்கள்.248/1A1, 1A2, 1B ஆகியவற்றில் சொத்துக்கள் இருந்தன என்றால், அந்த விவரம் எனக்கு தெரியவில்லை.

7) மேற்படி என் முப்பாட்டனார் மந்தி (எ) காவேரி இறந்ததற்கு பின்னிட்டு அவரது மூன்று ஆண் வாரிசுகளான சித்தன், சின்னப்பன், அம்மாசி ஆகியோர்கள் தான் இந்த தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால், சரிதான். மேற்படி சித்தன், சின்னப்பன், அம்மாசி ஆகியோர்கள் தங்கள் கூட்டு அனுபவத்திலிருந்த குடும்ப சொத்துக்களை வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டு அதன் அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்து தங்கள் அனுபவத்திலுள்ள நிலங்களுக்கு தங்களது பெயரில் தனிப்பட்டா பெற்றுக்கொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்தனர் என்றால், சரிதான்.

8) மேற்படி சித்தன், சின்னப்பன், அம்மாசி ஆகியோர்கள் ஓலைப்பட்டி கிராம சர்வே எண்கள்.248/1A1, 1A2, 1B ஆகியவற்றிலுள்ள நிலங்களை நிலவுடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பே வாய்மொழி பாகபிரிவினை செய்து கொண்டு ஒவ்வொருவரும் தலா 74 செண்டுகளுக்கு அவரவர்கள் பெயரில் பட்டா பெற்றுக்கொண்டு தனித்தனியாக அனுபவித்து வருகின்றனர் என்றால், நிலவுடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பே அவர்கள் வாய்மொழி பாகபிரிவினை செய்து பட்டா பெற்றனரா என்ற விவரம் எனக்கு தெரியாது.

9) மேற்படி சர்வே எண்கள்.248/1A1, 1A2, 1B ஆகியவற்றிலுள்ள பூர்வீக

சொத்துக்களுக்கு கிழபுறமாக சித்தன், சின்னப்பன், அம்மாசி ஆகியோர்கள் சேர்ந்து ச.எண்.248/1A3 ல் 2 ஏக்கர் 13 செண்ட் நிலத்தில் சித்தனுக்கு 1 ஏக்கர் 6–1/2 செண்டும், சின்னப்பன் மற்றும் அம்மாசி ஆகியோர்களுக்கு தலா 53–1/4 செண்ட் நிலங்களையும் தனித்தனியாக ஒரே தேதியில் கிரயம் பெற்றனர் என்றால், சரிதான்.

10) மேற்படி ச.எண்.248/1A3 ல் கிரயம் பெற்ற சொத்துக்களை மேற்படி சொத்துக்களுக்கு மேற்குபுறமுள்ள பூர்வீக சொத்துக்களில் சித்தன், சின்னப்பன், அம்மாசி ஆகியோர்களது பாகங்களுக்கு அனுசரனையாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால், சரிதான்.

11) மேற்படி ச.எண்.248/1A3 ல் உள்ள நிலங்களுக்கு கிழபுறமாக மேட்டூரிலிருந்து சேலம் செல்லும் பிரதான சாலையிலிருந்து சிந்தாமணியூர் செல்லும் கிளை சாலை தென்வடலாக செல்கிறது என்றால், சரிதான். மேற்படி சிந்தாமணியூர் செல்லும் சாலையை ஒட்டி மேற்குபுறமாக ச.எண்.248/1A3 ல் உள்ள நிலங்கள் அமைந்துள்ளது என்றால், சரிதான்.

(2, 3, 5 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.